# நாட்கள் (2)

நாலு படி ஏற மேலும் கீழும்
மூச்சு வாங்குது;

வரிந்து கட்டிக் கொண்டு வேலை பார்த்த
கை நடுங்குது;

கல் முள் என்று பாராமல்
காடு கரை எல்லாம் சுற்றி வந்த
கால் ஓய்ந்து போகுது;

படுத்தால் தூக்கம்
சண்டைக்காரன் போல்
தூர விலகிப் போகுது;

சதா சும்மா இருப்பதே
பெரும் பாரமாய் ஆளைப்
போட்டு அமுக்குது;

நாலு வார்த்தை பேச
யார் கிடைப்பார் என்று
பாதை பார்த்து மனம்
ஏமாந்து போகுது;

எண்ண ஓட்டமெல்லாம்
அந்தக் காலத்து விஷயங்களையே
சுற்றிச் சுற்றி வருகுது;

பத்திலும், பருவத்திலும்
பார்த்த பழகிய மனிதர்களையும்
நடந்த நிகழ்வுகளையுமே மனசு
திரும்பத் திரும்ப அசை போடுது...

அ. ஷா
பெங்களூர்
21 நவம்பர் 2010.